இலக்கியங்களில் நீரியச் சூழலியல் பதிவுகளும் விழிப்புணர்வும்

முனைவர் பி. பன்னீர்செல்வம்
உதவியாளர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
மாவட்ட ஆட்சியரகம், விருதுநகர்
DOI: https://doi.org/10.5281/zenodo.19220343

முன்னுரை

ஒரு நாட்டின் நில அமைப்பும், இயற்கைக் கூறுகளும் அந்நாட்டின் வரலாறு, நாகரிகம், பண்பாடு போன்றவற்றை உருவாக்கும் அடித்தளமாக இருக்கின்றன. குறிப்பிட்ட ஒரு நிலப்பரப்பின் பருவ நிலைக்கும், இயற்கை வளத்துக்கும் ஏற்றவாறு அந்தந்த நிலப்பகுதியில் வாழும் மனிதர்களின் ஒழுக்கமும் ஒழுகலாறும் அமைகின்றன. நீர்சுசு மனித வாழ்விற்கு அமுதம் போன்றது. நீர் இன்றேல் இவ்வுலகில் யாதொரு செயலும் நடைபெறாது. இலக்கியங்களில் இடம்பெறும் நீரியச்சுழலியல் பதிவுகள் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

நீரியச் சூழலியல்

"நீர்" மனிதவாழ்விற்கு அமுதம் போன்றது. நீர் இன்றேல் இவ்வுலகில் யாதொரு செயலும் நடைபெறாது. சுத்தமான நீர், நல்ல மழை, வளமான மண், மலைகள், காடு இவை அனைத்தும் ஒருங்கே கொண்ட நாடே வளமான நாடு ஆகும். இவையே உயிரியப் பன்மை பல்கிப்பெருக வகைசெய்யும் முக்கிய அங்கம் ஆகும். "உயிர்ச்சூழல் அமைப்பின் அங்கங்கள் ஏதேனும் ஒன்றில் பிரச்சினை தென்பட்டாலும் அதை அந்த உயிர்ச்சூழல் அமைப்பின் ஆரோக்கியமின்மைக்கும் இயற்கையின் கோட்பாடு மீறப் பட்டிருப்பதற்கும் அறிகுறியாகப் பார்ப்பது பாரம்பரிய அறிவியல்."1 நீர் பல்வேறு அம்சங்களைக் கொண்டு மனிதருக்கும், பிற உயிர்களுக்கும் வாழ்வாதாரமாக விளங்குகிறது.

நீரின் பெருமையும் நீரரணும்

நீர்வளம் சிறந்து இருந்தமையால்தான் தமிழர்நாகரிகம்சிறந்துவிளங்கியது. இலக்கிய மரபில்சுட்டப்பெறும்ஐவகைநிலங்களிலும் சூழலியலுக்கு ஏற்ற நீர்நிலைகள் இருந்தன.

குறிஞ்சி - அருவி, சுனைஃ
முல்லை - காட்டாறு, சுனை
மருதம் - ஆறு, குளம்
நெய்தல் - கடல், கழி, கயம்
பாலை - கூவல் (சிறிய நீர்நிலை)

நீராதாரங்கள் மாந்தர் நலனுக்குப் பேருதவி புரிகின்றன. சங்கத் தமிழர் நீரின் பெருமையினை உணர்ந்திருந்தனர் என்பதைப் பின்வரும் பாடலடிகள் வழி அறியலாம்.

"நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே"
(புறம். 18: 18-23)

காவிரியில் புதுப்புனல் பெருக்கெடுத்துப் பாய்வதால் உழவர்கள் பெருமகிழ்வுடன் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டனர்.

"உழவர் ஓதை, மதகு ஓதை'
உடைநீர் ஓதை தண்பதாங் கொள்
விழவர் ஓதை ' சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி"
(சிலம்பு. கானல்வரி 4)

என்ற அடிகளில் காவிரியாற்றின் பெருமை சுட்டப்பெறுகின்றது.

மழையே நீர்வளத்துக்கு அடிப்படை. பண்டைத் தமிழகத்தில் மலைவளமும், காட்டுவளமும் சிறப்பாக இருந்தமையால் நீர்வளம் செழித்து இருந்தது.

"பெயல் கால் மறைத்தலின், விசும்பு காணலரே
நீர்பரந்து ஒழுகலின் நிலம் காணலரே"
(குறுந். 355)

"மழை எழுந்து இறுத்த நளிர் தூங்கு சிலம்பின்
கழை அமல்பு நீடிய வான்உயர் நெடுங்கோட்டு
இலங்குவெள் அருவி வியன் மலைக் கவாஅன்
. . . . . .
இயங்குநர் மடிந்த அயம்திகழ்சிறு நெறிக்
கடுமா வழங்குதல் அறிந்து"
(நற். குறி. 257: 1-4, 7-8)

மேற்கண்ட பாடலடிகளில் மரங்கள் செறிந்த அருவிவீழும்மலைப்பகுதியில்சிங்கம்முதலான அரிய விலங்குகள் செல்லும். ஆகையால், அவ்வழியே மக்கள் யாரும் செல்லமாட்டார்கள் என்ற குறிப்பு இடம்பெற்றுள்ளது.

மலையில் முகில்கள் தோன்றி
மழைவளம் பெருக்கியதை,
"வான்புகு தலைய குன்றம் முற்றி
அழிதுளி தலைஇய பொழுது"
(நற். 347: 4-5)

என்ற பாடலடிகளும், மேலும்,

"மழை விளை யாடுங் குன்று"
(குறுந். 108: 1)

என்ற பாடலடிகளும் சுட்டுகின்றன.

நாட்டிற்குச்சிறந்தஅரணாகவிளங்குவன நீரும், வளமான மலையும், காடும் என வள்ளுவர் சுட்டுவதை,

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்" **(குறள். 742)**

என்றகுறளடிகள்சித்திரிக்கின்றன. இத்தகைய நீரரண் சங்கத் தமிழ் மரபில் இடம் பெற்றுள்ளது. நீரரண்மன்னரதுகோட்டையைச் சுற்றி அகழி என்ற பெயரில் அமைக்கப் பட்டிருந்தது. மேலும், அதில் கொடிய முதலைகளை வளர்ப்பர். நீரை அரணாக உடையகொல்லையில்முள்ளிச்செடிகளால் வேய்ந்த கூரையையுடைய சிறு குடில்கள் இருந்ததை,

"கண்டல் வேலிக் கழிசூழ் படப்பை
முண்டகம் வேய்ந்த குறியிறைக் குரம்பை"
(நற். நெய். 207: 1-2)

என்ற பாடலடிகள் சுட்டும்.

நீரின் சுழற்சி

ஞாயிற்றின் உதவியால் கடல்நீர் ஆவியாக மாறி மேகங்களை உருவாக்குகிறது. பின்பு, பூமிக்குமழையைத்தருகிறது.நீரின்பண்பானது உறைபனி, நீராவி, உப்புக்கடல் நீர், நிலத்தடிநீர் என இருக்குமிடத்திற்கேற்ப மாறுபடுகிறது. இதனை,

"குணகடல் முகந்து, குடக்குபு ஏர்பு இருளி,
மண்திணி ஞாலம் விளங்க, கம்மியர்
செம்பு சொரி பானையின் மின்னி, எவ்வாயும்
தன்தொழில் வாய்த்த இன்குரல் எழிலி"
(நற். 153: 1-4)

என்ற அடிகள் சித்திரிக்கின்றன. மேலும்,

"கான மஞ்ஞைக் கமஞ்சூல் மாப்பெடை
அயிரியாற்றுஅடைகரைவயிரின்நரலும்"
(அகம். 171: 10-11)

"கடல்நீர் முகந்த கமஞ்சூல் எழிலி
குடமலை யாகத்துக் கொள்ளப்(பு) இறைக்கும்"
(கார்நாற்பது, 33)

என்ற அடிகளில் கடல்நீர் மேகமாக மாறி, மேற்குமலையில் மழையைத் தந்த செய்தியை அறியலாகிறது.


"பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி" **(முல்லைப். 4-5)**

"நிறையிரும் பௌவம் குறைபட முகந்து கொண்டு,
அகல் இரு வானத்து வீசுவளி கலாவின்"
(குறிஞ்சிப். 47-48)

"திரையிரும் பனிப்பௌவம் செவ்விதா அறமுகந்து,

உரஉரும் உடன்று ஆர்ப்ப, ஊர்பொறை கொள்ளாது" **(பரி. 7: 1-2)**

என்ற பாடலடிகளில் கடல்நீர் மழையைத் தந்தது என்பது சித்திரிக்கப்பட்டுள்ளது. கடல்நீர் ஆவியாதல் குறித்து இன்றைய அறிவியலார் குறிக்கும் வரைபடம்.



சுற்றுச் சூழலியலில் நீரானது முக்கியக் காரணியாக உள்ளது.

- நீர் உறைதல் - (மழை, பனி) நிலத்தில் பொழிதல்.
- ஓடை, ஆறு - நிலத்திலிருந்து கடலை அடைதல்.
- பயிர், விலங்கினங்கள் - உண்ணும் நீர், நீராவிப்போக்கு, வியர்வைப்போக்கு,

மரங்கள் மூச்சுவிடுதல் போன்றவற்றால் வளிமண்டலத்தை அடைகிறது. ஆற்றுநீரானது கடல் நீரோடு கலந்ததை,

"தூர்மலர் துவன்றிய கரைபொரு நிவப்பின், மீமிசை நல்யாறு கடல் படர்ந்தா அங்கு" **(மலைபடு. 51-52)**

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன.

நீரின் ஆழமும் தூய்மையும்

வெள்ளமானது யானைகளையே மறைக்கும் அளவு ஆழமுடையது. ஆதனை ஓடக்கோல் கொண்டு அளந்தறியா நிலையை,

"கழைநிலை பெறாக் காவிரி நீத்தம்" **(அகம். 6: 6)**

"நெடுநீர் ஆம்பல் அடைப்புறத்து அன்ன" **(குறு. 352)**

என்ற அடிகள் சுட்டுகின்றன. மழைபெய்த காலையானது அழகாக இருந்ததை,

"வான்தளி பொழிந்த காண்பு இன் காலை" **(நற். 264)**

"நெடுவான் மின்னி, குறுந்துளி தலைஇ" **(நற். 274)**

என்ற பாடலடிகள் சித்திரிக்கின்றன. நீரின் இனிமையைச் சுட்ட,

"வேனிலாயினுந் தண்புன லொழுகும் தேனூர்" **(ஐங். 54: 2-3)**

என்ற பாடலடிகளும், மானுண்ட நீர் காதலுடை தலைவிக்கு இனிமையாவதை,

". . . . . பும் படப்பைத் தேன் மயங்கு பாலினும் இனிய - அவர்நாட்டு உவலைக் கூவற்கீழ் மான்உண்டு எஞ்சிய கலிழி நீரே" **(ஐங். 203)**

என்ற பாடலடிகளும் இயம்புகின்றன.

மழையின் இருநிலைகள்

சரியானகாலத்தே பெய்யும் மழையானது காலமாரி என்றும், பருவம் மாறிப் பெய்யும் மழையானது வம்பமாரி என்றும் சுட்டப் பெறுகின்றது.

"மடவ வாழி மஞ்ஞை மாயினம் காலமாரி பெய்தென, அதன் எதிர் ஆவலும் ஆலின் பிடவும் புத்தன" **(குறுந். 251: 1-3)**

"காலமாரி மாலை மாமலை இன்இசை உருமினம் முரலும்" **(குறுந். 200: 5-6)**

என்ற அடிகளில் காலத்தே மழை பெய்தமையை அறியமுடிகின்றது. வம்பமாரி பெய்ததை,

"பருவம் வாரா அளவை நெரிதரக் கொம்புசேர் கொடிஇணர் ஊழ்த்த வம்ப மாரியைக் கார் என மதித்தே" **(குறுந். 66: 3-5)**

என்ற அடிகளால் அறியமுடிகின்றது. பருவத்தில் மழை பெய்தமையால் உயிரினங்கள் இன்புற்று இருத்தலை,

"வானம் பொழுதொடு சுரப்பக் கானம் தோடு உறுமடமான் ஏறுபுணர்ந்து இயல,

புள்ளும் மிஞிலும் மாச்சினை ஆர்ப்ப,
பழனும் கிழங்கும் மிசையறவு அறியாது
பல்ஆன் நல்நிரைபுல் அருந்து உகள
பயம்கடை அறியா வளம்கெழு சிறப்பின்"
(பதிற். 89: 1-6)

என்றபாடலடிகள்சுட்டும். தலைவன் இல்லாத வாழ்க்கை, நீரில்லாத வாழ்க்கைக்கு ஒப்பாகும். இதனை,

"நீரின்றமையா வுலகம் போலத்
தாமின் றமையா நந்நயந் தருளி"
(நற். 1: 6-7)

என்ற அடிகள் சுட்டுகின்றன.

வானத்து மழையை நோக்கி வாழும் உயிர்கள்

உலகில்உள்ளஅனைத்துஉயிர்களும்நீரை அடிப்படையாகக் கொண்டே உயிர்த்திருக்கின்றன. வானம்பாடி மழைநீரை மட்டுமே உண்டு வாழும் பறவையென இலக்கியம் சுட்டுதலை,

"துளிநசை வேட்கையான் மிசைபாடும் புள்"
(கலி. 46: 20)

"துளிநசைப் புள்" **(புறம். 198: 25)**

என்ற பாடலடிகள் சுட்டும். உயிர்கள் நீரை நம்பி வாழ்வதை,

"கோல்நோக்கி வாழுங் குடியெல்லாம் தாய்முலைப்
பால்நோக்கி வாழுங் குழவிகள் - வானத்
துளிநோக்கி வாழும் உலகம் உலகின்
விளிநோக்கி இன்புறூஉங் கூற்று"
(நான்மணிக்கடிகை, 29)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. ஊரை அடுத்து குளம் இருப்பது மனித வாழ்வியலுக்கு உகந்தது. இதனை,

"கான்யாற்(று) அடைகரை ஊர் இன(து)"
(இனியவை நாற்பது, 4)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. மக்கள் அனைவரும் உண்ணுதற்கு நீர் எடுக்கும் துறை (நீர்நிலை) ஊரின் அருகில் இருந்ததை,

"ஐயவி அன்ன சிறுவீ ஞாழல்
செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்த்
துறை அணிந்தன்று அவன் ஊரே"
(குறு. 50: 1-3)

மேலும்,

"ஊர்க்கும் அணித்தே பொய்கைப்
பொய்கைக்கு
சேய்த்தும் அன்றே, சிறுகான் யாறே"
(குறு. 110)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன.

நீரின் தேவை

நீர் உயிர்களுக்கும், பயிர்களுக்கும் தேவையான திரவப்பொருள் மண் குளிர மழை பெய்ததால் பயிர் விளைந்ததை,

"மண்கண் குளிர்ப்ப, வீசித் தண் பெயல்
பயன்நிலம் குழைய வீசிப் பெயல் முனிந்து"
(அகம். 23)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. "மக்கள் வாழ்வதற்கும், முன்னேறுவதற்கும் ஆறுகள் பேருதவிபுரிகின்றன. பயிர்களுக்கு மட்டுமல்லாது உயிர்களுக்கும் ஆற்றுநீர் குடிதண்ணீராகப் பயன்படுகிறது. கடல்நீர் மிகுதியாக இருந்த போதிலும், உப்பு நீராதலால் பருகப் படுவதில்லை. கடலில் பயணம் செய்த ஓர் ஆங்கிலக்கவி இதனைக் கீழ்க்கண்டவாறு அழகாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

"பொங்கும் கடலில் எங்கும் தண்ணீர் -
ஆனால்
சொட்டு உண்ணீர் மட்டும் இல்லை"

தற்காலத்தில் ஆறுகள் அருகில் இல்லாக் கடற்கரைப் பட்டினங்களில் அந்த அளவில் குடிதண்ணீர்த்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே, விஞ்ஞானிகள் கடல்நீரைக் குடிநீராக மாற்ற முயல்கின்றனர்."2 கடலில் நீர் நிறைந்து இருந்தாலும் கடலைநாடி குடிநீர் அருந்தமக்கள்செல்வதில்லை. தாகம்தீர்க்கும் பொருட்டுக் கிணற்றின் ஊற்றைத் தேடிக் குடிப்பர். இதனை,

"எறிநீர்ப் பெருங்கடல் எய்தி யிருந்தும்
அறுநீர்ச் சிறுகிணற்(று) ஊறல்பார்த்(து)
உண்பர்" **(நாலடியார், 275)**

என்றபாடலடிகள்சித்திரிக்கின்றன. உண்ணக்கூடிய நீர்த்துறை பற்றிய செய்தியை,

"உண்துறை மகளிர் இரிய, குண்டுநீர்
வாளை பிறழும் ஊரற்கு"
(நற். மரு. 310: 3-4)

என்றபாடலடிகள்சுட்டுகின்றன.களிறுமிதித்த பள்ளங்களில் நீர் நிரம்பி வழியிடை வருவோர்க்கு நீர் உண்ணப் பயன்படுதலை,

"ஆர்களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பில்"
(குறு. குறி. 52: 1)

"விலங்கு மலைக்கவாஅன் கரும்புநடு பாத்தியன்ன
பெருங்களிற்று அடிவழி நிலைஇய நீரே"
(குறு. 262)

என்ற பாடலடிகள் சித்திரிக்கின்றன.

தூய்மையற்ற நீர்

தூய்மையற்ற நீர் குறித்த செய்தியும் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது. "சுத்தம் இல்லாத குடிநீரினால் வருடத்திற்கு 2 கோடிப்பேர் உலகம் முழுக்க இறந்து போவதாக உலகளாவிய சுகாதார அமைப்பு தெரிவிக்கின்றது."3 பாலைநிலத்தில் குடிப்பதற்குச் சுத்தமான நீர் இல்லை என்ற செய்தியை,

"படுசுடர் அடைந்த பகுவாய் நெடுவரை,
முரம்புசேர் சிறுகுடி, பரந்த மாலை,
புலம்பு கூட்டுண்ணும் புல்லென மன்றத்து
கல்லுடைப் படுவில் கலுழி தந்து,
நிறைபெயல் அறியாக் குறைத்து ஊண்
அல்லில்" **(நற். 33)**

என்ற பாடலடிகளும், ஆற்றுநீரானது மாறும் அளவிற்கு இலைகள் அதன் மீது விழுந்ததை,

"நீர்நிறம் கரப்ப, ஊழுறுபு உதிர்ந்து
புமலர் களுலிய கடுவரற் கான்யாற்று"
(அகம். குறி. 18)

என்ற பாடலடிகளும் உணர்த்துகின்றன. தூய்மையற்ற நீர்த்துறையை உண்ணுதற்கும் பயன்படுத்தியதை,

"சேறொடுபட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர்" **(புறம். 204: 7-)**

என்ற அடிகளும், விலங்குகளும் கலங்கிய நீரை உண்டதை,

"களிறு பொரக் கலங்கு . . . . . .
அரிதுண் கூவல்" **(புறம். 306: 1-2)**

என்ற பாடலடிகளும் தெரிவிக்கின்றன.

உவர்நீரைப் பெருமூச்சு விட்டவண்ணம் தலைவி உண்டதை,

"வெயில்தின வருந்திய் நீடுமருப்பு ஒருத்தல்,
பிணர்அழி பெருங்கை புரண்ட கூவல்
தெண்கண் உவரிக் குறைக்குட முகவை,
அறனிலாளன் தோண்ட, வெய்து உயிர்த்து,
பிறைநுதல் வியர்ப்ப, உண்டனள் கொல்லோ
(அகம். பாலை. 207)

என்ற பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன.

நிலத்தால் திரிந்துபோன நீரின் சுவையை மேம்படுத்த தமிழர்கள் நெல்லிக்கனியினைப் பயன்படுத்தினர். கிணற்றுநீர் உவராக இருப்பின் அதனுள் நெல்லி வேரினை இட்டனர். ஊருணியின் கரைகளில் நெல்லி மரத்தை வளர்த்தனர். நீரைத் தூய்மைப்படுத்திப் பருகியதையும், செம்மண் நிலத்தில் ஊறிய நீரைச் சிறிய பானையில் வைத்திருந்தனர் என்பதையும்,

"புவிற் படுவில் கூவல் தோண்டிய
செங்கண் சில்நீர் பெய்த சீறில்
முன்றில் இருந்த முதுவாய்ச் சாடி
யாம் கஃடு உண்டென, வறிது மாசு இன்று"
(புறம். 319: 1-4)

என்ற அடிகள் விளக்குகின்றன. பானையில் வைக்கப்பட்ட நீர் சிறிதளவு மாசற்ற நீராக மாறியது. மண்ணால் கலங்கிய நீரைத் தூய்மை செய்யவேண்டித் தேற்றா வித்தினை இட்டு நீரைத் தெளிவாக்கிப் பயன்படுத்தினர்.

"கலம்சிதை இல்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போல் தளிந்து"
(கலி. 142: 62-)

என்ற பாடலடிகளில் அச்செய்தியும் விழிப்புணர்வு நிலையும் சுட்டப்படுகின்றன. கூதிர் காலத்தே இளையோரும், முதியோரும் குடத்தின்கண் உள்ளதண்ணீரைப்பருகாமல்,,தூபமூட்டியிலுள்ள நெருப்பின் வெம்மையினால் ஆக்கிய வெந்நீரைப் பருகினர். இதனை,

"கல்லென துவலை தூவலின், யாவரும்
தொகுவாய்க் கன்னல் தண்ணீர்
உண்ணார்,
பகுவாய்த் தடவில் செந்நெருப்பு ஆர"
(நெடுநல். 64-67)

என்ற பாடலடிகள் விரித்துரைக்கின்றன.

தற்போது தண்ணீரைச் சுத்தம் செய்து வழங்குவதாகப் பல வியாபார நிறுவனங்கள் விளம்பரம் செய்தாலும், பெரும்பாலும் அவை கெடுதலையே செய்கின்றன. "நிலத்தடி நீரையெடுத்து அதனை "ரிவர்ஸ் ஓஸ்மாசிஸ்" என்ற முறையின் கீழ் சுத்திகரிக்கும்போது இயற்கையாகத் தண்ணீரில் இருக்கும் அனைத்துத் தாது உப்புகளும் பிரிக்கப்பட்டு தண்ணீரின் இயற்கையான சுவை குறைந்து விடுகின்றது. சுவை குறைந்த தண்ணீரைச் சுவையாக்குவதற்காக "ஓசோனைஸ்" செய்து சுவையேற்றுகின்றனர். இந்த "ஓசோனைஸ்" செய்யப்பட்ட தண்ணீரைத் தொடர்ந்து பயன் படுத்தினால் பற்கள், எலும்புகள் பொடிந்துப் போகும் எனவும், உறுதித்தன்மை குறைந்து போகும் எனவும் மருத்துவர்கள் கூறுகிறார்கள்."4 குடிநீரை வியாபாரமாக்கிவிட்ட இந்நாளில் சுத்தமான குடிநீர் கேள்விக்குறியாகி விட்டது.

நீர்நிலைகளைப் பேணல்

முற்காலத்தில் குளங்களில் நீரைத் தேக்கி வைத்தனர். ஊர்ப் பொதுக்குளங்கள் கரைகள் உயர்த்தப்பட்டு, அதன்வழி மழைநீரைச் சேமிக்கும் விழிப்புணர்வு இருந்தது. இரவு பகலாகத் துயிலாது குளங்களைக் காத்தனர். இதனை,

"கொளக் குறை படாஅக் கோடுவளர் குட்டத்து" **(அகம். 162: 1)**

". . . . . ஈங்கைத்
துய் அவிழ் பனிமலர் உதிரவீசித்
தொழில்மழை பொழிந்த பானாட்
கங்குல்
எறிதிரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப்
பெருங்குளம் காவலன் போல"
(அகம். 252: 9-14)

என்ற பாடலடிகள் விவரிக்கின்றன. வெள்ளப் பெருக்கின் காரணமாக கரை உடைப்பு ஏற்பட்டபோது மக்கள் அனைவரும் ஒன்று கூடி உடைப்பைச் சரிசெய்ததை,

"வெந்தலைச் செம்புனல் பரந்துவாய் மிகுக்கும்
பலசும் பதப்பர் பரியவெள் ளத்துச்
சிறைகொள் புதலிற் புகன்றை வாயம்"
(பதிற். 30: 17-19)

"வளன் புங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீந்து உக்கா
சிறையும் உண்டோ, செழும்புனல் மிக்குழி"
(மணிமே. 5: 19)

என்ற பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன. "மலைக் காடுகளில் உள்ள சுனைகளில் "சூர்மகள்", "ஆரமகள்" என்னும் அணங்குகள் (மோகினிகள்) வாழ்கின்றனர் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆகையால், நீரைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தினர் என்பதை அறிய முடிகின்றது. மேலும், தெய்வங்களின் இடப்பெயர்ச்சிக்கும் நீர் ஊடகமாக இருந்துள்ளது என்பர் தொ. மரமசிவன்."5 நீர்நிலைகளில் உலவக்கூடியவை நீரரமகளிர் ஆவர் என்பர். மேலும், வரையர மகளிர், பாவைமகளிர் என்னும் அணங்குகள் இருந்ததாகவும் குறிப்புகள் உள்ளன. இந்த அணங்குகள் மனிதர்கள் தீமை செய்யும் போது கோபம் கொண்டு அவர்களைத் தாக்கும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். வரையரமகளிர் அருவிகளில், சாரலில் உள்ள மலைக்குகைகளில் மறைந்து உறைவதாகக் கூறுதலை,

"தொடாஅ
நீர்இழி மருங்கில் கல்அளைக் கரந்தஅவ்
வரையர மகளிர்" **(அகம். 342)**

என்ற பாடலடிகள் சித்திரிக்கின்றன. நீரில் உறையும் சுரரமகளிரைச் சாட்சியாக வைத்துத் தலைவியைப் பிரியமாட்டேன் என்று தலைவன் சூளுரைத்ததை,

"எம் அணங்கினவே
. . . . . .
எக்கர் நண்ணிய எம் ஊர் வியன்துறை

நேர் இறை முன்கை பற்றி
சூரர மகளிரொடு உற்ற சூளே"

(குறுந். 53)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இதனால் மக்கள் நீர்நிலைகளைக் கண்டு வணங்கும் தன்மை கொண்டு வாழ்ந்தனர். நீர் மனித வாழ்வியலுக்குத் தேவையானது. ஆகையால் அதனைப் பாதுகாத்தலைக் கடமையாகக் கொண்டனர்.

அணைகட்டி நீரைத் தேக்கிவைக்கும் அறிவு

ஓடும் நீரைத்தேக்கி வைத்தால் மழையில்லாத காலங்களில் பயன்படுத்தலாம் என்ற அறிவு அன்றையமக்களிடம் இருந்துள்ளது. அணை கட்டும் தொழில்நுட்பத்தையும் அவர்கள் அறிந்திருந்தனர். குளங்களில் நீரைத்தேக்கி விவசாயத்திற்குப் பயன்படுத்தியதை,

"குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்" **(புறம். 33: 5)**

"பெருங்குள மடைநீர் விட்டென"

(நற். 340)

"மிகுபெயல், உப்புச்சிறை நில்லா வெள்ளம் போல" **(அகம். 208)**

"சிறை அழிப் புதுப்புனல் ஆடுகம்"

(ஐங். 78)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன.

"நதியை அணைகட்டித் தடுப்பது என்பது காலங்காலமாய் பயபக்தியுடன் ஆறுகளைத் தெய்வமாகப் போற்றிவரும் பழங்குடியினரின் கன்னித்தாயை வன்புணர்ர்ச்சிக்கு ஆட்படுத்துவதற்கு ஒப்பாகும் என்று ஆசிரியர் ஒருவர் எழுதுகிறார்."6

"தேம்பாய் மருதம் முதல் படக் கொன்று வெண்தலைச் செம்புனல் பரந்து வாய் மிகுக்கும்
பலசூழ் பதப்பர் பரிய, வெள்ளத்துச் சிறைகொள் புசலின் புகன்ற ஆயம்"

(பதிற். 30: 16-19)

என்ற பாடலடிகளின்வழி வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும் அணை இருந்த செய்தியை அறியமுடிகிறது.

நிலத்தடி நீர்

மழையில்லாதகாலங்களில்குழிதோண்டி நிலத்தில் உள்ள நீரைப் பெற மனிதன் முயன்றான். அவற்றிற்கு கூவல், கேணி, கிணறு என்று பல பெயர்கள் சுட்டப் பெறுகின்றன. "தரையில் ஒரு குழி தோண்டினால், மேலாக உலர்ந்தமண்தென்படுகிறது. அதற்குஅடுத்து பல மீட்டர்கள் ஆழம் வரை ஈரமண் அமைந்திருக்கிறது. மேலும் ஆழமாகத் தோண்டினால், நீர் கசியத் தொடங்கி குழியில் நீர் சேருகிறது. எவ்வளவு ஆழத்தில் நீர்சேரத் தொடங்குகிறதோ அதை ஊற்றுநீர் மட்டம் என்கிறோம்."7 பாலையில் வெயிலில் வெப்பமுற்ற பரற்கற்கள் மிகுந்த பள்ளத்தின் ஒருபுறத்தில் குந்தாலியால் கிணறு தோண்டப் பட்டது. பசுக்கூட்டங்களை அதில் ஆயர் நீரைப் பருக வைத்தனர், மிஞ்சியதை, யானை உண்டது.

"வெயில் வெய்துற்ற பரல்அவல் ஒதுக்கில், கணிச்சியில் குழித்த கூவல் நண்ணி,
ஆன்வழிப் படுநர் தோண்டிய பத்தல் யானை இனநிரை வெளவும்"

(நற். பாலை. 240: 6-9)

"கடற்றுஅடை மருங்கின் கணிச்சியின் - குழித்த
உடைக்கண் நீடுஅமை ஊறல் உண்ட பாடுஇன் தெண்மணி, பயம்கெழு பெருநிரை" **(அகம். 399: 6-8)**

"சுரன் முதல் வருந்திய வருத்தம் பைபயப் பாஅர் மலிசிறு கூவலின் தணியும்"

(நற். 41)

என்ற பாடலடிகளின்வழி பாலைவழிச் செல்வோர் கூவலின் நீரை அருந்தினர் என்பதை அறியமுடிகிறது.

ஆநிரைகளை மேய்க்கும் கோவலர் தோண்டிய கிணற்றினின்று வளைந்த வாயினையுடைய பத்தலால் இறைத்த நீர், ஒழுகிச் சென்று சிறுகுழியில் நிரம்பியது. இதனை,

"பயநிரை சேர்ந்த பாழ்நாட்டு ஆங்கண் நெடுவிளிக் கோவலர் கூவல் தோண்டிய

கொடுவாய்ப் பத்தல் வார்ந்து உகு சிறுகுழி"
(அகம். பாலை. 155)

என்ற அடிகள் சுட்டுகின்றன. கோவலர் தோண்டிய கிணற்றில் நீர் ஊறாத தன்மையால் அவற்றில் இலைச் சருகுகள் மூடிக் காணப்பட்டதை,

"பரல்மண் சுவல முரண்நிலம் உடைத்த வல்வாய்க் கணிச்சி, கூழார், கோவலர் ஊறாது விட்ட உவலைக் கூவல்"
(அகம். பாலை. 21)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. நீரினை இறைப்பதற்கும், முகப்பதற்கும் பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தினர். அவை,

பத்தர் - நீர் இறைக்கும் கருவி/ எக்குவ - நீர் வீசும் கருவி
கோடு - நீர் வீசும் கொம்பு/ சிவிறி - நீர் வீசுங் கருவி
வட்டு - நீர் வீசுங்கருவிகளுள் ஒன்று
முகவை - நீர் முகக்கும் கருவி

என்பனவாகும்.

நீர் விளையாட்டுக்கள்

அருவி, குளம், ஆறு, கடல் என்று பல்வேறு நீர்நிலைகளிலும் மக்கள் நீராடி உள்ளனர். நீரில் பல்வேறு விளையாட்டுக்களையும் விளையாடி உள்ளனர். "நீச்சல், பாய்ச்சல், மூழ்கல், நீச்சல் நடனம், கடலாடல், புனலாடல், தைந்நீராடல், மிதவை விளையாட்டுக்கள் ஆகியவை சங்ககால நீச்சல் விளையாட்டுக்களாகக் காணப்படு கின்றன. நீந்துதல் மற்ற எல்லா நீர் விளையாட்டுக்களிலும் நிகழும்."8 தலைவன் மார்பில் சாய்ந்து அருவியில் நீராடுதல் இனிமையானது என்கிறாள் தலைவி. இதனை,

"ஆர்கலி வெற்பன் மார்பு புணைஆக கோடுஉயர் நெடுவரைக் கவாஅன், பகலே, பாடுஇன் அருவி ஆடுதல் இனிதே"
(குறுந். 353: 1-3)

என்றபாடலடிகளுமட், பெண்கள்துறையில் பாய்ந்து நீராடியதை,

"ஒண்ணுதல் அரிவை பாய்ந்தென . . . குவளை நாறித் தண்ணெண் றிசினே பெருந்து றைப் புனலே" **(ஐங். 73)**

என்ற பாடலடிகளும் சுட்டுகின்றன.

ஆடவர் மகளிரொடு நீராடியதை,

"அலமரல் ஆயமொடு அமர்துணை தழீஇ நலம்மிகு புதுப்புனல் ஆட," **(ஐங். 64)**

என்ற பாடலடிகள் சித்திரிக்கின்றன. மகளிர் தோழியரோடு நீராடியதை,

"புனல்ஆடு மகளிர்க்குப் புணர்துணை உதவும்" **(ஐங். 15)**

என்ற பாடலடிகள் இயம்புகின்றன. புதுப்புனல் வரும்போது புனலாடுதல் பெருவழக்காக இருந்துள்ளது.

"தலைப் பெயற் செம்புனல் ஆடி"
(ஐங். 80)

என்ற பாடலடிகளில் கார்காலத்தில் முதன் முதலாகப் பொழியும் மழையால் தோன்றும் வெள்ளத்தில்நீராடுதல்குறிக்கப்படுகின்றது.

விழிப்புணர்வு

நீரைப் பயன்படுத்துவதில் மனிதன் விழிப்புணர்வோடு செயல்பட வேண்டும். சுத்தமான குடிநீரைப் பயன்படுத்துதல் தனிமனிதனின் உரிமையாக உள்ளது.

"வேலை என்பது அடிப்படை உரிமை, கல்வி என்பது அடிப்படை உரிமை என்பதைப் போல, நல்ல குடிநீரும் காற்றும் எனது அடிப்படை உரிமை என்று கோர வேண்டிய அவலம் அரங்கேறியிருக்கிறது. இந்தியாவில் நீர் ஆதாரங்களுக்கும் நிலத்தடி நீருக்கும் நிகழ்த்தப் பட்டு வரும் மிகப்பெரும் அநீதியைப் போல வேறெந்த நாட்டிலும் நடக்கவில்லை எனலாம். சீனா, பிலிப்பைன்ஸ் போன்றநாடு களில் பசுமை நீதிமன்றங்கள் ஏற்பட்டதன் அடிப்படையானகாரணமே தொழிற்சாலை மாசுகளால்குடிநீர் ஆதாரங்கள்பாழ்பட்டது தான்."9 புவியானதுபழையநிலையைஅடைய வேண்டுமானால்அரசும், சர்வதேச அமைப்புகளும் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்.

அவை:

1) நீராதாரங்களைக் காத்தல், 2) புதுப்பித்தல், 3) வளமான புமியை உருவாக்கல் என்பனவாகும்.

பூமி புதுமலர்ச்சி பெற நீராதாரங்கள் களவாடப்படுதல் தவிர்க்கப்பட வேண்டும். நதிகள் மனித வாழ்க்கையின் நிதிகள். அந்த நிதிகள் வற்றிப்போகும்போது வாழ்க்கையில் வளமும் வற்றிப்போகக்கூடும். புமித்தாயின் நீராகிய பாலினை மனிதன் அசுத்தம் செய்யாது தேவைக்கு மட்டுமே பயன்படுத்துதல் நலம் பயக்கும். நீர் மலையில் உருவாகி சுனை, அருவி என்றாகி நிலத்தில் ஆறு, குளம் (நிலத்தடி நீர்) என்று பரிணமித்து இறுதியில் கடல் நீரில் கலக்கிறது. உலகளாவிய நீர்ப் பிரச்சினையில் வியாபாரமாக்கப்பட்டுவிட்ட தண்ணீருக்காக உலகப்போர் வந்தாலும் வரலாம். வீட்டுக்கு வீடு, நாட்டுக்கு நாடு நீரைப் பங்கிடுதலில் பிரச்சினை எழுவது அன்றாட வாழ்க்கையில் இன்று காணமுடிகிறது.

"கடைசி மரமும் பட்டுப்போனதும்ஃ
கடைசி மீனும் பிடிக்கப்பட்டது
கடைசி ஒருசொட்டுத் தண்
ணீரும்ஃவிசமாகிப் போனது.
பின்னர்தான் தெரிந்ததும்ஃ மனிதனுக்கு
பணத்தைத் தின்ன முடியாது என"10

என்ற அடிகளில் நீர் நஞ்சானதால் அருந்த நீர் இல்லாது, உணவும் இல்லாது மனிதன் வருத்தத்திற்கு ஆளாவான் என்னும் செய்தி வழி மதிப்பிடப்பட்டுள்ளது.

முடிவுரை

மேற்கண்ட தலைப்புகள் நீராதாரம் இலக்கியங்களில் பேசப்பட்ட தன்மை குறித்து விளக்குகின்றன. நீரானது பல்வேறு தொழிற்சாலைக் கழிவுகளாலும், மனிதனது பயன்பாட்டுப் பொருட்களாலும் மாசு படிந்து இருப்பதும், நீர்நிலைகள் வறட்சிக்கு உள்ளாவதும் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது. நீராதாரங்கள் குறித்த வழிப்புணர்வு மனித சமூகத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் அவசியமானதாகும்.

சான்றெண்விளக்கம்

1. சங்கீதா ஸ்ரீராம் (கட்டுரையாளர்), பாரம்பரிய மற்றும் நவீன வேளாண் அறிவியல் வித்தியாசங்களும், விபரீதங்களும், ப. 25.
2. வி. ராமகிருஷ்ண சாஸ்திரி, இந்திய ஆறுகள், ப. 5.
3. கி. வசந்தாராணி, பாட்டில் தண்ணீர் தொடரும் அபாயம், ப. 6.
4. மேலது, ப. 7.
5. தொ. பரமசிவன், பண்பாட்டு அசை வுகள், ப. 13.
6. அர்ச்சனா பிரசாத், சுற்றுச்சூழலும் வாழ்வுரிமையும், ப. 83.
7. இளம்பாரதி (தமிழாக்கம்), நமது நீர்வளங்கள், ப. 22.
8. செங்கை, பொதுவன், பழங்கால விளையாட்டுக்கள், ப. 84.
9. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப. 5.
10. கி. வசந்தாராணி, பாட்டில் தண்ணீர் தொடரும் அபாயம், ப. 8.